சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **32/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-7 |
| சாட்சியின் பெயர் | : | பாலகுமார் |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி |
| கிராமம் | : | வடக்குத்தெரு, தொழுவூர் |
| தாலுக்கா | : | வலங்கைமான் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 33 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். நான் அ.சா.1 சுந்தரர்ராஜை எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எதுவும் எனக்கு

தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

கடந்த 15.02.2025 ம் தேதி 03.40 மணிக்கு அ.சா.1 கொடுத்த புகாரின் பேரில் சம்பவ இடமான செம்மங்குடி புதுத்தெருவில் ராஜா என்பவரின் வீட்டிற்கருகில் போலீசார் விசாரித்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததில், பார்வை மகஜரில் நானும், யுவராஜ் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு, தற்போது போலீசார் விசாரணையில் கூறியதை மறைத்து நாங்கள் செய்த கையொப்பத்தையும் மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.07 16:04:59 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.